

▸ தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி, தலைமைச் செயலகத்தில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேவூர் எஸ்.ராமச்சந்திரன் தனது திருமண நாளை முன்னிட்டு குடும்பத்துடன் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

ரத்னா (45). மச்சான் கிரீஸ் 28 மற்றும் மனைவி நவ்யா (29), குழந்தைகள் ஸ்ரீநயா (5), விஸ்வேஸ் (5) ஆகியோருடன் பெங்களூரிலிருந்து காஞ்சிபுரத்துக்கு வந்து கொண்டிருந்தனர்.

காரை தியாகராஜன் ஓட்டி வந்தார். கார் ஓச்சேரி தேசிய நெடுஞ்சாலை

# வேலம்மாள் பள்ளியில் கலை பண்பாட்டு விழா

## 501 மாணவர்களுக்கு பட்டம்




**சென்னை, ஜூலை 16–** முகப்பேர் வேலம்மாள் பள்ளியில் நடைபெற்ற கலை பண்பாட்டு விழாவில் 501 மாணவ, மாணவிகளுக்கு இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் பட்டம் வழங்கினார்.

முகப்பேர் கிழக்கு, வேலம்மாள் பள்ளியானது மாணவ, மாணவிகளிடையே தனித்திறமையை மேம்படுத்தும் வகையில் இசை, நடனம், ஓவியம், யோகா போன்ற கலைகள் பாடத்திட்டத்துடன் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. அதன்படி, வேலம்மாள் பள்ளியில் கடந்த 6 ஆண்டுகளாக கலை பண்பாட்டு விழாவை நடத்தி வருகிறது.

இதில், திரைத்துறையை சேர்ந்த பல்துறை பிரபலங்கள் மூலம் கலைகளை வளர்க்கும் வகையில் ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, இயக்குனர் கங்கை அமரன், இசை கலைஞர் சாகிர் உசேன் போன்ற பிரபலங்கள் முன்னிலையில் ஆண்டுதோறும் கலைபண்பாட்டு திருவிழா தொடங்கப்பட்டு, மாணவ, மாணவிகளுக்கு பட்டமளிப்பு விழா நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, திரைப்பட இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் முன்னிலையில், நடப்பாண்டுக்கான கலை பண்பாட்டு விழா தொடக்கம் மற்றும் கடந்தாண்டுக்கான பட்டமளிப்பு விழா பள்ளி வளாகத்தில் நடத்தப்பட்டது.

இந்த விழாவில், கலை பண்பாட்டில் பயிற்சி பெற்ற 3ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரையிலான 501 மாணவ, மாணவிகளுக்கு பட்டமளிப்பு விழா நடத்தப்பட்டது. அதனுடன், நடனம், பாடல், இசை, யோகா போன்ற பல்சுவை நிகழ்ச்சிகள் மாணவ, மாணவிகள் மூலம் நடத்தப்பட்டது.

வேலாம்மாள் பள்ளியின் முதன்மை முதல்வர் ஜெயந்தி முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் பேசியதாவது: மாணவர்களுக்கு எது பிடிக்குமோ அதனை செய்ய வேண்டும். அதற்கு முன் அவை சரியானவையா என ஆசிரியர்களிடம் ஆலோசனை பெற்று நடக்க வேண்டும், நமக்கு வேண்டிய செயலை செய்வதற்கு நேரம் ஒதுக்கி செய்ய வேண்டும், மனதை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும் என்றார். இந்நிகழ்ச்சியை பள்ளியில் பயிலும் 3 ஆயிரம் மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர் ஆகியோர் ஆர்வமுடன் பார்த்து ரசித்தனர்.

# சாலை விபத்துகளில் உயிரிழந்தவர்கள்

# காமராஜர் பிறந்தநாள் விழா